ஆண்டு பட்டிகை வழக்கு எண்.47/2025

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 47/2025 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : சந்திரா ( புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : ராமசாமி |
| Village | : சிறுகுடி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 77/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of May 2026

(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 14.02.2025ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை சுமார் 7.15 மணியளவில் சந்தைக்கு சென்று காய்கறி வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தபோது, எங்கள் வீட்டின் முன்பாக என் கணவரும், என் மகள் ராணி மாலினி தேவியும் இருந்தார்கள். அப்போது எனக்கு பின்புறமாக நடந்து வந்து கொண்டிருந்த 25 வயது மதிக்கத்தக்க ஒரு பையன் திடீரென எனது கழுத்தில் அணிந்திருந்த தங்கசெயினை அந்த நபர் பிடித்ததும், நான் என் கையால் செயினை பிடித்துக் கொண்டு திரும்பி பார்த்தபோது அந்த நபர் என்னை கையால் என் தலையில் அடித்து கீழே விழுந்துவிட்டேன். அதன் பின்னர் என் கழுத்தில் இருந்த செயினை கழுத்து வழியாக கழற்றி சென்றுவிட்டார். மேற்படி நகையானது 3 கிராம் தாலியுடன் கூடிய 6 பவுன் தங்க செயின் ஆகும்.

2. பின்னர் எனது சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் எல்லாம் வந்துவிட்டார்கள். அப்போது நானும், என் கணவரும் இருசக்கர வாகனத்தில் தேடி சென்றபோது அந்த நபர் ஓடி மறைந்துவிட்டார். அவர் ஓடியபோது அவ்வழியாக இருந்த பலசரக்கு கடைக்காரர்கள் பார்த்ததாக சொன்னார்கள். பின்னர் போலீசார் வந்து விசாரித்தார்கள். பின்னர் மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அந்த புகார் மனுவை நான் சொல்லச் சொல்ல என் மகன் எழுதினார். பின்னர் நான் அதைப் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். எனது நகையை பறித்து சென்ற நபரின் பெயர் ரஞ்சித்குமார் என்று பின்னர் தெரிந்து கொண்டேன்.

3. சம்பவத்தின் போது எதிரியை நான் பார்த்தேன். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆதார் அடையாள அட்டையில் கண்ட நபர்தான் எதிரி என்று சாட்சி அடையாளம் காட்டினார். புகார் கொடுத்து 2 வாரம் கழித்து காவல் நிலையத்திலிருந்து எனது நகை கிடைத்துவிட்டதாக போலீசார் வர சொன்னார்கள். அப்போது எனது நகையை திருடிய நபரின் பெயர் ரஞ்சித்குமார் என்றும், நான் காவல் நிலையம் சென்றபோது ரஞ்சித்குமார் என்னை போலீசாரிடம் அடையாளம் காட்டியதாகவும் போலீசார் சொன்னார்கள். அவரிடமிருந்து உருக்கிய தங்க கட்டியாக எனது நகையை வாங்கியுள்ளதாக போலீசார் சொன்னார்கள். அதன்பேரில் நீதிமன்றத்தில் மனு செய்து 3 1/4 பவுன் தங்ககட்டியாக வாங்கி சென்றேன். எங்கள் வீட்டு பகுதியில் இருந்த சி.சி.டி.வி. பதிவுகளை பார்வையிட்டு போலீசார் அந்த நபர் இருசக்கர வாகனத்தில் வந்து எங்கள் ஊர் மந்தையம்மன் கோவில் அருகே நிறுத்தி வைத்துவிட்டு என்னை பின் தொடர்ந்து வந்த விபரங்களை சேகரித்து எதிரியை பிடித்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.05.08 15:07:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்